

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தாம்பரம் இரயில் நிலையத்திலிருந்து சிதம்பரத்திற்கு நேற்று (14.7.2025) இரயிலில் புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் வழியனுப்பி வைத்தனர்.

### ஒசாகாவில் நடைபெறும் 'எக்ஸ்போ 2025'ல் தமிழ்நாடு பெவிலியன் திறப்பு!

### திராவிட மாடல் முதலமைச்சர் முன்னிலையில்

# ஜப்பான் நிறுவனங்களால் போடப்பட்ட ஒப்பந்தங்கள் 100% முதலீடுகளாக மாறியுள்ளன!

## தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

ஒசகா, ஜூலை 15-

தமிழ்நாடு அரசின் தொழில்துறையினருடன் ஜப்பான் நாட்டிற்குச் சென்றுள்ள தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

நமது Team TamilNadu ஒரு மிக முக்கியமான பயணத்தைத் தொடங்கியுள்ள இந்த தருணத்தில், கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் ஜப்பான் பயணத்தின் போது நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் 100% முதலீடுகளாக மாற்றப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.



இதுவரை இல்லாத சாதனையாக, ஒப்பந்தங்களை முழுமையான முதலீடுகளாகவும், தமிழ்நாட்டிற்கான வேலைவாய்ப்பாகவும் மாற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை தொடர்ந்து உயர்ந்து கொண்டே போகிறது!

ஜூலை 14 அன்று ஜப்பானின் முக்கிய நகரமான ஒசாகாவில் நடைபெறும் உலக எக்ஸ்போ 2025இல் இந்தியா பெவிலியனுக்குள் அமைந்துள்ள தமிழ்நாடு பெவிலியனை திறந்து வைத்து நமது பயணத்தைத் தொடங்கியுள்ளோம். தமிழ்நாடு பெவிலியன் நம் மாநிலத்தின் மரபு, வளம், தொழில்துறையிலுள்ள முன்னேற்றம் ஆகிய அனைத்தையும் கொண்டாடும் ஓர் அர்ப்பணிப்பாகும்.

இந்நிகழ்வில், தமிழ்நாட்டின் பண்பாட்டு ஆழமும், எதிர்கால இலட்சியங்களும் மிக வலிமையாக எதிரொலித்ததுடன், நமது பாரம்பரியக் கலைவடிவங்களான பறை, பரதநாட்டியம், சிலம்பம் மற்றும் அடிமுறை ஆகியவை நிகழ்த்தப்பட்டன. ஒசாகாவில் சிறந்த ஏற்பாடுகளை செய்து தந்த திரு. சந்துரு அப்பர் அவர்களின் அருமையான ஆலோசனைகளுக்கும் உதவிக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

இந்தப் பயணத்தின் போது, நமது நீண்டகால தொழிற்கூட்டாளிகளான எஹைம் மற்றும் ஹிரோஷிமா பகுதிகளுடன் மேலும் வலுவான ஒத்துழைப்புகளை விரிவுபடுத்தவும், புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராயவும், எதிர்கால தொழில்துறைகளுக்கான ஒத்துழைப்புகளை ஏற்படுத்தவுமான செயல்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வ்ழிகாட்டுதலுடன் தமிழ்நாடு அரசின் தொழில்துறை மேற்கொள்ளவிருக்கிறது.

தொழில்துறை வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டமும் வேகமாகவும் முனைப்போடும் நகர வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் தெளிவான வழிகாட்டுதலின் வெளிப்பாடாக ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதிவிட்டுள்ளார்.

### 10 ஆயிரம் முகாம்கள்!

# 'உங்களுடன் ஸ்டாலின்' - ஒரு புரட்சிகரத் திட்டம்!

### வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 15-

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், "உங்களுடன் ஸ்டாலின்" ஒரு புரட்சிகரத் திட்டம் - என பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**நாளை (அதாவது இன்று) தொடங்குகிறது ஒரு புரட்சிகரத் திட்டம்!**

**அரசு அலுவலகங்களை நீங்கள் நாடிச் செல்லாமல், உங்கள் வீடுகளுக்கே விண்ணப்பங்களைக் கொண்டு வந்து கொடுத்து அதனைப் பெற்றுத் தீர்வு காண்பதுதான் உங்களுடன் ஸ்டாலின்!**

**10,000 முகாம்கள் நடைபெறவுள்ளன. இது குறித்து மேலும்**



**விவரித்திருக்கிறார் அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் அமுதா அவர்கள்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





### தமிழ்நாடு அரசின்

# இயல், இசை, நாடக மன்றம் சார்பில் - 'நல்கை' வழங்கும் திட்டங்கள்!

## தகுதிவாய்ந்தோர் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகோள்!

*சென்னை, ஜூலை 15-*

*தமிழ்நாடு அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் செயல்படுத்தவுள்ள "நல்கை வழங்கும் திட்டங்கள்" குறித்த செய்தி வெளியீடு வருமாறு :-*

*2024-2025-ம் ஆண்டிற்கான தமிழில் புதிய நாட்டிய-நாடகங்கள் மற்றும் நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய ஒரு நாடகத்திற்கு ரூ.1,50,000 இலட்சம் நிதியுதவி வழங்குதல்.*

*தமிழில் சிறந்த புதிய நாட்டிய-நாடகங்கள் (தமிழ் கலைகள், இலக்கியம், பண்பாடு) மற்றும் நாடகங்கள் உருவாக்கி (வரலாறு, புராண, சமூக நாடகங்கள்) மேடையேற்றம் செய்யும் நிறுவனங்களுக்கு நல்கை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*2024-2025-ம் ஆண்டிற்கான தமிழில் கருத்தாழமிக்க அரிய கலை சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.*

*தமிழகத்தில் கலை சார்ந்த நூல்களை எழுதும் நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் வண்ணம், கருத்தாழமிக்க தமிழில் அரிய கலை நூல்களை பதிப்பிக்க, நூல் ஒன்றுக்கு ரூ.2,00,000/- வீதம் 5 நூல்களுக்கு ரூ.10.00 இலட்சம் நல்கை வழங்கம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*மேற்காண் 2 திட்டங்களிலும் விண்ணப்பிக்க விரும்பும் கலைக்குழு / கலை நிறுவனங்கள் / நூலாசிரியர்கள் அந்தந்த திட்டத்திற்கான விண்ணப்பப் படிவம் மன்றத்தில் இலவசமாக நேரிலோ அல்லது தபாலிலோ (சுயமுகவரியிட்ட உறையில் ரூ,10/-க்கான தபால் தலை ஒட்டி மன்றத்திற்கு அனுப்பி) பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பித்தினை முழுமையாக பூர்த்தி செய்து 31.07.2025-க்குள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

*உறுப்பினர்-செயலாளர்,*
*தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,*
*31, பொன்னி, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை,*
*சென்னை - 600 028.*
*(தொலைபேசி - 044 2493 7471) மின்னஞ்சல் - tneinm@gmail.com, tneinm@tn.gov.in*

*இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



செம்பாக்கம் வடக்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி மாபெரும் தெருமுனை கூட்டம் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் எல். டில்லிபாபு தலைமையில் பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் வரவேற்புரையில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி.ஆர்.நரேஷ்பாபு பி.யோகேஷ், கே.பிரபு, இ.பழனிகுமரன், ஏ.கலைவாணன், எம்.அருண் கண்ணன், எஸ்.கே. புனிதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார். மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, தலைமைக் கழக பேச்சாளர்கள் மலர்மன்னன், தாம்பரம் ஏகாம்பரம், கீர்த்தனா, பல்லாவரம் மண்டல தலைவர் பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்திய பிரபு, ஜெ.இன்ஷாமாம், எம்.இளவரசன், இளைஞர் அணி, வட்ட கழக செயலாளர், நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.